# செய்தி வெளியீடு

## சேலம் மாவட்டத்தைச் சார்ந்த கைம்பெண்கள் கவனத்திற்கு

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வூதியத்துடன் படைப் பணியிலிருந்து வெளிவந்த பிறகு மறுவேலைவாய்ப்பு அடிப்படையில் குடிமைப்பணியில் வேலைவாய்ப்பு பெற்று, குடிமைப் பணிக்கான ஓய்வூதியமும் பெற்று உயிர்நீத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு இராணுவ குடும்ப ஓய்வூதியத்துடன் சிவில் குடும்ப ஓய்வூதியமும் சேர்த்து பெற்றுக் கொள்ளலாம் என அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. எனவே தகுதியான காலஞ்சென்ற முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்கள் இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

இது குறித்து மேலும் விபரங்களுக்கு சேலம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/20.04.2017

மாவட்ட ஆட்சித்தலைவர்.

/ஆணைப்படி அனுப்பலாகிறது/
ஒம்/09.06.2017
உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலன்,
சேலம் 636 001.